# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.43/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமாரசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 69 | கிராமம் | : கனகம்மாசத்திரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**09.12.2024**

**<u>வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதிகள் ராமசந்திரன், மனோகரன் சொல்லித்தான் தெரியும் என்றால் இல்லை. எனக்கு நேரடியாக தெரியும். வாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் சின்ன மாமனார் மகன்கள் ஆவார்கள். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என் மாமனார் 1 ம் வாதி ராமசந்திரனுக்கு சொத்தை கிரையம் கொடுத்தார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் கிரையம் பெற்ற சொத்தை ராமசந்திரன் பெயரில் இருந்து ஜெயராம் நாயுடு பெயருக்கு பட்டா மாற்றிவிட்டார்கள்.

2. நான் முதல் விசாரணையில் சொத்துக்கள் என் மாமனாருக்கு பாத்தியம் இல்லை என்றும் என் மாமியாருக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் என் மாமனார், மாமியார், என் மனைவி, என் மச்சான்கள் இருவர் என எல்லோரும் கையெழுத்து போட்டுள்ளார்கள். அதில் நானும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். என் மாமியாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் என் மாமனார், மாமியார், என் மனைவி, என் மச்சான்கள் இருவர் என எல்லோரும் ஏன் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் 1979 ல் என் மாமனார் தன் பெயருக்கு பட்டா மாற்றி கொண்டார். சொத்து என் மாமியாருடையது என்பதால் என் மாமியாரும் பட்டா

இருப்பதால் என் மாமனாரும் வாரிசுகள் என்பதால் மக்கள் மூவரும் கையெழுத்து போட்டனர்.

3. நான் சொல்லும் பத்திரத்தில் ஜெயராம நாயுடு கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். என் மாமியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றாலும் வழக்கு சொத்து துரைசாமி நாயுடுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் மாமியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி ஜெயராமன் எனக்கு மச்சான் என்றால் சரிதான். அவரது சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேன்.

4. ஜெயராமனுக்கும் எங்களுக்கும் சுமார் 15-20 வருடங்களாக சுமூகமான பேச்சுவார்த்தை இல்லை என்றால் பேசுவதற்கு எதுவுமில்லை. எனவே பேசவில்லை. வேலை இருந்தால் கூப்பிட்டு செல்வோம். எங்களுக்கும் ஜெயராமனுக்கும் இடையில் பிரச்சனை என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(உரிய வாய்பளித்தும் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

(மறு விசாரணை இல்லை)

## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.43/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 4ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அனந்தபத்மாவதி | மதம் | : இந்து |
| க/பெ | : குமாரசாமி | ஜாதி | : -- |
| வயது | : 64 | கிராமம் | : கனகம்மாசத்திரம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**09.12.2024**

<u>வா.சா. 4 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. துரைசாமி நாயுடு எனது அப்பா என்றால் சரிதான். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 ஆண் 1 பெண் ஆவார். அவர்கள் 1. ஜெயராமன், 2. சுப்பிரமணி, 3. ஜெகதீசன், 4. பாலன் மற்றும் நான் ஆவேன். சுப்பிரமணி என்ற அண்ணன் திருமணத்திற்கு முன்பே இறந்துவிட்டார். வழக்கு சொத்துக்கள் என் அப்பா துரைசாமி நாயுடுக்கு பாத்தியம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் 20 வருடமாக என் அப்பாவை நான்தான் பராமரித்தாக கூறியிருப்பதில் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை நான் பராமரித்தேன் என்றால் நான் படிக்கவில்லை. எனவே எனக்கு வருடம் சொல்ல தெரியாது.

2. நான் எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால் கனகம்மாசத்திரத்தில் குடியுள்ளேன். என் அப்பா அம்மாவை நான்தான் பராமரித்தேன் என நான் சொல்வது தவறு என்றாலும் ஜெயராமன் தான் என் அப்பா அம்மாவை பார்த்து வந்தார் என்றாலும் தவறு. ஜெயராமன் என் அப்பா அம்மாவை பார்த்து வந்ததால்தான் ஜெயராமனுக்கு நல்ல மனநிலையில் என் அப்பா உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் என் அப்பாவுக்கு மிகவும் முடியாமல் இருந்த சமயம் இறப்பதற்கு 5 மாதம் முன்பு அவரை தூக்கி சென்றார்கள். அவ்வாறு என் அப்பாவை தூக்கி சென்றார்கள் என நாங்கள் புகார் கொடுத்தோமா என்றால் தூக்கி செல்லவில்லை. பாலன் மகன் கூட்டி சென்றான்.

3. என் அப்பா நல்ல மனநிலையில்தான் வந்து உயில் எழுதி வைத்தார்

என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. வாதிகள் வாங்கிய கிரைய பத்திரத்தில் என் அண்ணன் ஜெயராமன் கையெழுத்து போடவில்லை என்றால் போடவில்லை. ஆனால் என் அண்ணன்கள், நான், என் அப்பா, அம்மா அனைவரும் போட்டுள்ளோம். எனக்கும் ஜெயராமனுக்கும் சுமுகமான உறவோ பேச்சுவார்த்தையோ இல்லை என்றால் வந்தால் பார்க்கும் இடத்தில் பேசிக்கொள்வோம். எனக்கும் என் அண்ணனுக்கும் பிரச்சனை உள்ளது என்பதால்தான் நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(உரிய வாய்பளித்தும் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

(மறு விசாரணை இல்லை)